**CNR.No.TNTU07-000689-2023**

**சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி,திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** B.ராஜா, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 26ம் நாள்)

**அசல் வழக்கு எண்.246/2023**

1. சேகர்
   த/பெ சின்னதம்பி
2. சிவக்குமார்
   த/பெ சின்னதம்பி
3. ஜெயந்தி
   க/பெ ரவி
4. சீதா
   க/பெ சசிகுமார்
5. மஞ்சுபிரியா
   க/பெ ஸ்ரீதர்
6. அரவிந்தன்
   த/பெ ரவி .. வாதிகள்

/ எதிர் /

1. அசோகன்
   த/பெ சின்னதம்பி
2. கவிதா
   க/பெ தட்சிணாமூர்த்தி
3. தில்ஷாத்
   க/பெ அப்துல்கரீம் (எ) கோவிந்தராஜன்
4. ரகுமான்
   த/பெ அப்துல்கரீம் (எ) கோவிந்தராஜன்
5. ரோசினி பேகம்
   த/பெ அப்துல்கரீம் (எ) கோவிந்தராஜன் .... பிரதிவாதிகள்

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 27.03.2026ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ஜி.ஞானசேகரன், அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். அருணாச்சலம், அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஏ.சி.

தேவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி. ஆர். அனிதா காரத்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்பு**

01) தாவா சொத்தில் வாதிகளுக்கு 3/6 பாகம் வேண்டியும், அதன்படி வழக்கறிஞர் ஆணையரை நியமித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்தினை 2ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தில் இருந்து கிடைக்கும் இடைக்கால வருமானத்தில் வாதிகளுக்கு 3/5 பாகம் வேண்டியும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02) **வழக்குரையின் சுருக்கம்:**

தாவா சொத்து, ஆதியில் சின்னதம்பி என்பவருக்கு சொந்தமானதாகும். தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் ஏற்பட்டு, தாவா சொத்தில் தொடர் அனுபவசுவாதீனத்தில் இருந்து வந்துள்ள மேற்படி சின்னதம்பி, தாவா சொத்து குறித்து எந்தவொரு ஆவணங்களையும் எழுதி வைக்காமல் கடந்த 26.09.2011ல் இறந்துள்ளார்.

மேற்படி சின்னதம்பியின் சட்டப்படியான வாரிசுகள் 1,2 வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும், அவரது இறந்துள்ள மகன் ரவி என்பவரின் வாரிசுகளான 3 முதல் 6 வாதிகளும், இறந்துள்ள மகன் அப்துல்கரீம் (எ) கோவிந்தராஜனின் வாரிசுகளான 3 முதல் 5 பிரதிவாதிகளும் ஆவார்கள்.

மேற்படி சின்னதம்பியின் மனைவி கடந்த 11.10.2020ல் இறந்துள்ளார். அவரது சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்தில் 1,2 வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/6

பங்குரிமையும், 3 முதல் 6 வாதிகளுக்கு மொத்தமாக சேர்த்து 1/6 பங்குரிமையும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மொத்தமாக சேர்த்து 1/6 பங்குரிமையும் உள்ளது.

தாவா சொத்தில் 1ம் பிரதிவாதியின் கூட்டு அனுபவசுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக 2ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவருக்கு எதிராக வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 117/2012 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், தாவா சொத்தின் ஒரு பகுதி குறித்து, கடந்த 30.09.2010 தேதியிட்ட உயில் ஆவணத்தை 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான சின்னத்தம்பி. 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சங்கதி உண்மையானது கிடையாது. மேற்குறிப்பிட்ட தேதியில் உயில்ஆவணம் எழுதுவதற்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு நல்ல உடல்நிலையும், நல்ல மனநிலையும் இல்லை. மேற்குறிப்பிட்ட உயில் ஆவணத்தை அவர் எழுதவேண்டிய அவசியம் இல்லை. பின்னிட்டு, அ.வ.எண்.117/2012 வழக்கினை 1ம் பிரதிவாதி வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், தாவா சொத்தில் வாதிகளின் உரிமையை ஏமாற்றும் வகையில், 2ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

ஆகையால், தாவா சொத்தில் வாதிகளுக்கு 3/6 பாகம் வேண்டியும், அதன்படி வழக்கறிஞர் ஆணையரை நியமித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், தாவா சொத்தினை 2ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ எவ்வித உரிமை மாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், தாவா சொத்தில் இருந்து கிடைக்கும் இடைக்கால வருமானத்தில் வாதிகளுக்கு 3/5 பாகம் வேண்டியும், வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03) 1ம் பிரதிவாதியால் தனியாகவும், 3 முதல் 5 பிரதிவாதிகளால் தனியாகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ள தனித்தனியான எதிர்வழக்குரைகளின் பொதுவான சுருக்கம் :**

வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா சங்கதிகள் அனைத்தும் உண்மையானதாகும். அ.வ.எண்.117/2012 என்ற வழக்கை 1ம் பிரதிவாதி ஏற்கனவே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக 2ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவருக்கு எதிராக தாக்கல் செய்து, பின்னர் அதனை திரும்ப பெற்றுக்கொண்டுள்ளார்.

தாவா சொத்து குறித்து, கடந்த 30.09.2010 தேதியிட்டு, 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் உயில் ஆவணம் மோசடியானதாகும். மேற்படி உயில் ஆவணத்தை எழுதி வைக்கக்கூடிய நல்ல உடல்நிலை மற்றும் மனநிலையில் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இல்லை.

1 மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி, தாவா சொத்தில் சட்டப்படியான பாகப்பிரிவினை உள்ளது. அவற்றை பிரித்து, அசல் வழக்கினை தீர்ப்பாக்குவதில், மேற்படி பிரதிவாதிகளுக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை.

**04) 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

தாவா சங்கதிகள் பொய்யானவை, தவறானவை. 2ம் பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர, மற்றவற்றை வாதிகள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

தாவா சொத்தின் ஆரம்பகால உரிமைமூலம் குறித்தும்,

வழக்குரையில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையில் குறிப்பிட்டுள்ள குடும்ப உறவுமுறை குறித்தும், கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையானதாகும்.

தாவா சொத்து, 2ம் பிரதிவாதியின் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்ற நிலையில், தாவா சொத்தின் வடபுற 2 ஏக்கர் சொத்து குறித்து, அவர் கடந்த 30.09.2010 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை 2ம் பிரதிவாதி பெயருக்கு, நல்ல உடல் நிலையிலும், மனநிலையிலும், யாருடைய வற்புறுத்தலும் இன்றி, எழுதிவைத்துள்ளார்.

கடந்த 26.09.2011ல் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்துள்ள நிலையில், மேற்படி உயில்ஆவணம் நடைமுறைக்கு வரப்பெற்று, உயில் ஆவண சொத்தில் 2ம் பிரதிவாதி அனுபவசுவாதீனத்தில் இருந்து வருகிறார். மேற்படி சொத்திற்கான வருவாய் ஆவணங்கள; 2ம் பிரதிவாதி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதியால் வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.117/2012 வழக்கில், மேற்படி உயில் ஆவண விவரத்தை 2ம் பிரதிவாதி குறிப்பிட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். அதன்பின், அ.வ.எண்.117/2012 வழக்கினை 1ம் பிரதிவாதி வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளார்.

தாவா சொத்தில் மீதியுள்ள தென்புற ஒரு ஏக்கர் சொத்து, இதுநாள்வரை பாகம் பிரிக்கப்படவில்லை. அவற்றை 6 பாகங்களாக பிரித்து, அதில் 1/6 பங்கினை 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்வதில் 2ம் பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லை. இந்நிலையில், 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான உயில் ஆவண சொத்தை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை. வழக்குரை சொத்து விவரம்

தவறானது. தாவாவில் வாதிகள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது. தாவா பரிகாரம் காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதிகள் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. ஆகையால், பொய்யான சங்கதிகளுடன் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**05)** தாவா வழக்குரை மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தபின், இவ்வழக்கில் முடிவு காணவேண்டிய கீழ்க்கண்ட எழுவினாக்கள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன.

1. இறந்துள்ள சின்னதம்பி என்பவரால், தாவா சொத்தில் வடபுற 2 ஏக்கர் சொத்து குறித்து கடந்த 30.09.2010 தேதியிட்டு, 2ம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்துள்ளதாக கூறும் உயில் ஆவணம் உண்மையானதா?
2. தாவா சொத்தில் 1, 2 வாதிகளுக்கு 2/6 பாகமும், 3 முதல் 6 வாதிகளுக்கு மொத்தம் 1/6 பாகமும் கிடைக்க வேண்டும் என்ற முதல்நிலை தீர்ப்பாணை வாதிகள் பெற முடியுமா?
3. தாவா சொத்தினை 2ம் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ எவ்வித, வில்லங்கமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க கூடியதா?
4. தாவா சொத்தின் வருமானத்தில் 3/5 பாகம் வாதிகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற பரிகாரம் வாதிகள் பெற முடியுமா?
5. வாதிகளுக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

**06)** வாதிகள் தரப்பில் 2ம் வாதி சிவக்குமார் என்பவர் மட்டும் வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியாக விசாரணை

செய்யப்பட்டுள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

07) தாவாவை எதிர்வழக்காடியுள்ள பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி அசோகன் என்பவர் பி.சா.1 ஆகவும், 2ம் பிரதிவாதி கவிதா என்பவர் பி.சா.2 ஆகவும், தட்சிணாமூர்த்தி என்பவர் பி.சா.3 ஆகவும், இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். 2ம் பிரதிவாதி தரப்பு எதிர்வாதத்திற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

08) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. வாதிகள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

<u>09) எழுவினா 1 ற்கான தீர்வு:–</u>

தாவா சொத்து, ஆரம்பத்தில், சின்னதம்பி என்பவருக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்து என வழக்கில் கூறப்பட்டுள்ளது. தாவா சொத்து குறித்து, அவர் பெயரில் வழங்கப்பட்டுள்ள கணிணி பட்டா நகல் வா.சா.ஆ.8 ஆக வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் ஆரம்பகால உரிமைமூலம் குறித்து, கூறப்பட்டுள்ள வழக்குரை சங்கதி, உண்மையானது என பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேற்படி சின்னதம்பியின், சட்டப்படியான வாரிசுகள் 1,2 வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் மற்றும் ஏற்கனவே இறந்துள்ள மகன் ரவி என்பவரது வாரிசுகளான 3 முதல் 6 வாதிகளும், ஏற்கனவே இறந்துள்ள மகன் அப்துல்கரீம் (எ) கோவிந்தராஜனின் வாரிசுகளான 3 முதல் 5 பிரதிவாதிகளும் ஆவார்கள் என வழக்குரை சங்கதிகள் அமைந்துள்ளன.

வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையில், வழக்கில்

கூறப்பட்டுள்ள மேற்படி குடும்பஉறமுறை எவ்வித மறுப்பும் இன்றி, பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா வழக்குரை சொத்து விவரத்தில், தாவா சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 3 ஏக்கர் என வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1,2 வாதிகளின் தகப்பனாரான சின்னதம்பி என்பவர் தாவா சொத்து குறித்து எந்தவொரு ஆவணங்களையும் எழுதி வைக்காமல், கடந்த 26.09.2011ல் இறந்துள்ளதால், அவரது சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில், தாவா சொத்தில், 1,2 வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/6 பங்குரிமையும், 3 முதல் 6 வாதிகளுக்கு மொத்தமாக 1/6 பங்குரிமையும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு மொத்தமாக 1/6 பங்குரிமையும் சட்டப்படியாக உள்ளதாக வழக்கில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி, வழக்கு சங்கதிகள் உண்மையானது என வாதிகளின் வழக்கினை ஒத்துரைத்து வாதிகளுக்கு ஆதரவாக 1 மற்றும் 3 முதல் 5 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். 2ம் பிரதிவாதி தரப்பில் மட்டும் தாவா எதிர்வழக்காடப்பட்டுள்ளது.

தாவா சொத்து குறித்து 2ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னதம்பி என்பவர் எந்தவொரு ஆவணங்களையும் எழுதி வைக்காமல், இறந்துள்ளார் என வழக்குரையில் கூறியுள்ளது. உண்மைக்கு மாறானது என 2ம் பிரதிவாதியால் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் உள்ள மொத்தம் 3 ஏக்கர் விஸ்தீரண சொத்தில் வடபுற 2 ஏக்கர் விஸ்தீரண சொத்து குறித்து, 2ம் பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 30.09.2010 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை , 2ம் பிரதிவாதி பெயருக்கு நல்ல மனநிலையிலும், உடல்நிலையிலும், யாருடைய வற்புறுத்தலும் இன்றி, எழுதி வைத்துள்ளதாகவும், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்தப்பின், மேற்படி உயில்ஆவணம் நடைமுறைக்கு

வரப்பெற்று, உயில்ஆவண சொத்தில், 2ம் பிரதிவாதி தனிப்பட்ட அனுபவசுவாதீனத்தில் இருந்து வருவதாக எதிர்வழக்காடப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் உள்ள வடபுற 2 ஏக்கர் சொத்து குறித்து 2ம் பிரதிவாதி பெயருக்கு, 2ம் பிரதிவாதியின் தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள உயில்ஆவணத்தின் அசல் பி.சா.ஆ.7 ஆக, 2ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பி.சா.ஆ.7 உயில்ஆவணம் உண்மையானது கிடையாது என்றும், மேற்படி ஆவணத்தை எழுதிக்கொடுக்கும் உடல்நிலை மற்றும் மனநிலையில், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இருக்கவில்லை என்றும், வாதிகள் மற்றும் 1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில், இந்திய வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 63ன்படியும், இந்தியச் சாட்சிய சட்டம் பிரிவு 68ன் படியும், பி.சா.ஆ.7 உயில்ஆவணம் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரால், 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள உண்மையான ஆவணம் என்பதை நிரூபிக்கும் சுமை 2ம் பிரதிவாதியை சார்ந்துள்ளது.

தாவா சொத்து, 2ம் பிரதிவாதியின் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தாவா சொத்து குறித்து, பி.சா.ஆ.7 போன்ற விருப்புறுதி ஆவணத்தை ஏற்படுத்துவதற்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்பது மறுக்க முடியாததாகும்.

பி.சா.ஆ.7 உயில் ஆவணம் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு, வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவண பதிவின்போது, பி.சா.ஆ.7 ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ள நபரின் புகைப்படம், மேற்படி ஆவணத்தில் ஒட்டப்பட்டு

அதன்மீது வாணியம்பாடி சார்பதிவாளர் குறுக்கு கையொப்பம் செய்துள்ளதாக குறிப்புகள் உள்ளது.

பி.சா.ஆ.7 உயில்ஆவணம் உண்மையானது கிடையாது என வாதிட்டுள்ள வாதிகள் தரப்பில், பி.சா.ஆ.7 ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள கையெழுத்துக்கள் 2ம் பிரதிவாதியின் தகப்பனாருடையது கிடையாது என்றும், மேற்படி ஆவண பதிவின்போது, ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்தில் காணப்படும் நபர் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இல்லை என்றும், மறுத்து வழக்காடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பி.சா.ஆ.7 உயில்ஆவணத்தில் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டுள்ள நபரும், மேற்படி ஆவண பதிவின்போது, ஆவண தரப்பினரை இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் முதலாவதாக சாட்சி கையெழுத்திட்டுள்ள நபருமான தட்சிணாமூர்த்தி என்பவர் 2ம் பிரதிவாதி தரப்பில் பி.சா.3 ஆக இவ்வழக்கில் வாய்மொழி சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

பி.சா.3 தட்சிணாமூர்த்தி இந்நீதிமன்றத்தில் பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து, 2ம் பிரதிவாதி எதிர்வாதத்திற்கு ஆதரவாக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். பி.சா.3 தட்சிணாமூர்த்தி என்பவரின் வாய்மொழி சாட்சியத்தின் நம்பகத்தன்மையை குறைக்கும்வகையில், வாதிகள் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரின் குறுக்குவிசாரணை வாய்மொழி சாட்சியம் அமையவில்லை.

மேற்படி பி.சா.3 தட்சிணாமூர்த்தி என்பவர் 2ம் பிரதிவாதியின் கணவர் என்பதோடு மட்டுமின்றி, 1,2 வாதிகளின் தாய்மாமன் என்ற உறவுமுறை ஆகிறார். மேற்படி, நெருங்கிய குடும்ப உறவுமுறை கொண்டுள்ள பி.சா.3 தட்சிணாமூர்த்தி வாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவேண்டிய நடைமுறை சாத்தியக்கூறு இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

பி.சா.ஆ.7 உயில்ஆவண தேதியில் அதனை எழுதிகொடுக்கும் உடல்நிலை மற்றும் மனநிலையில், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இல்லை என வாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலகட்டத்தில் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் உடல்நிலை பாதிக்கப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் இருந்துள்ளார் என்பதை நிரூபிக்கும் வகையில், வாதிகள் தரப்பில் இவ்வழக்கில் எந்தவொரு மருத்துவ ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

பி.சா.ஆ.7 உயில் ஆவண தேதிக்குப்பின்னர் சுமார் ஓர் ஆண்டு நிறைவடையும் தருவாயில், கடந்த 26.09.2011ம் தேதி 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்துள்ளார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. பி.சா.ஆ.7 ஆவணத்தை எழுதிக்கொடுக்க வாணியம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் நேரில் வருகைப்புரிந்துள்ளார் என்பது இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும், பி.சா.ஆ.7 உயில் ஆவண தேதிக்குப்பின், சுமார் ஓர் ஆண்டு கழித்து, 2ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்துள்ளார். இச்சூழ்நிலையில், பி.சா.ஆ.7 ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய அளவிற்கு 2ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு நல்ல உடல்நிலை மற்றும் மனநிலை இல்லையென்ற வாதிகள் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் ஏற்க மறுத்து அதனை நிராகரிப்பு செய்கிறது.

மேற்கூறியவாறு இந்நீதிமன்றத்தால், விவரிக்கப்பட்டுள்ள காரணங்களினால், தாவா சொத்தில் உள்ள மொத்த விஸ்தீரணமான 3 ஏக்கர் சொத்தில், வடபுற 2 ஏக்கர் சொத்து குறித்து, 2ம் பிரதிவாதி பெயருக்கு அவரது தகப்பனாரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பி.சா.ஆ.7 உயில் ஆவணம் உண்மையானது என்பதை தகுந்த சாட்சி, சான்றாவணங்கள் மூலம் 2ம் பிரதிவாதி தரப்பில் இவ்வழக்கில் நிரூபக்கப்பட்டுள்ளது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா–1 வாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால்

விடையாளிக்கப்படுகிறது.

**<u>10) எழுவினா 2–ற்கான தீர்வு:–</u>**

தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்து குறித்து, 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள பி.சா.ஆ.7 உயில்ஆவணம் உண்மையானது என மேற்கண்ட எழுவினா–1ல் ஏறகனவே இந்நீதிமன்றம் முடிவு கண்டுள்ள நிலையில், தாவா சொத்தில் மீதியுள்ள தென்புற 1 ஏக்கர் சொத்து குறித்து மட்டும் 1,2 வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும், தலா 1/6 பாகமும், 3 முதல் 6 வாதிகளுக்கு சேர்த்து மொத்தமாக 1/6 பாகமும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சேர்த்து மொத்தமாக 1/6 பாகமும், சட்டப்படியாக கிடைக்கக்கூடியது என முடிவு செய்யப்பட்டு, இவ்வழக்கின் எழுவினா–2 இந்நீதிமன்றத்தால் விடை காணப்படுகிறது.

**<u>11) எழுவினாக்கள் 3 மற்றும் 4ற்கான தீர்வு :</u>**

பி.சா.ஆ.7 உயில் ஆவணத்தின்மூலம் தாவா சொத்தில் உள்ள 2 ஏக்கர் விஸ்தீரண சொத்திற்கு 2ம் பிரதிவாதி சட்டப்படியான உரிமையாளர் ஆகியுள்ளார். இந்நிலையில், 2ம் பிரதிவாதி மேற்படி சொத்தினை எந்தவொரு வில்லங்கமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெறுவதற்குரிய தகுதியை வாதிகள் இழந்துள்ளனர்.

தாவா சொத்தின், இடைக்கால வருமானம் குறித்து, வாதிகள் தரப்பில், இவ்வழக்கில் தகுந்த சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இச்சூழ்நிலையில், தாவா சொத்தின் இடைக்கால வருமானத்தில் பாகம் வேண்டுமென்ற பரிகாரம் வாதிகள் சட்டப்படியாக பெறமுடியாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

ஆகையால், மேற்கண்ட காரணங்களினால், வாதிகள் வழக்கில் முன்வைத்துள்ள 2ம் பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், தாவா சொத்தின் இடைக்கால வருமானத்தில் பாகம்

வேண்டுமென்ற பரிகாரமும், சட்டப்படியாக வாதிகளுக்கு கிடைக்க முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினாக்கள் 3 மற்றும் 4 இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகின்றன.

12) <u>**எழுவினா 5 ற்க்கான தீர்வு**</u> :

தாவா பரிகாரங்களில் பாகப்பிரிவினை பரிகாரம் மட்டும் பகுதியாக வாதிகளுக்கு கிடைக்க கூடியது என்றும், மற்ற தாவா பரிகாரங்கள் எதனையும் வாதிகள் பெறமுடியாது என்றும், மேற்கண்ட எழுவினாக்களில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், தாவாவில் வாதிகள் வேறு எந்த பரிகாரமும் பெற முடியாது என முடிவு செய்யப்பட்டு, எழுவினா–5 இந்நீதிமன்றத்தால் விடைகாணப்படுகிறது.

13) **முடிவில்**, தாவா சொத்தில் உள்ள மொத்த விஸ்தீரணமான 3 ஏக்கர் சொத்தில், கடந்த 30.09.2010 தேதியிட்டு, 2ம் பிரதிவாதி பெயருக்கு, அவரது தகப்பனாரால், எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள பி.சா.ஆ.7 பதிவு செய்யப்பட்ட உயில்ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வடபுற 2 ஏக்கர் விஸ்தீரண சொத்து தவிர, மீதியுள்ள தென்புற 1 ஏக்கர் சொத்து மற்றும் அதில் உள்ள கிணற்றில் 1,2 வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் தலா 1/6 பாகமும், 3 முதல் 6 வாதிகளுக்கு சேர்த்து, மொத்தமாக 1/6 பாகமும், 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு சேர்த்து மொத்தமாக 1/6 பாகமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டும், இறுதிநிலை தீர்ப்பாணை வேண்டி, வழக்கு தரப்பினர்கள் தனியாக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியும், வாதிகள் வழக்கில் முன்வைத்துள்ள 2ம் பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் தாவா சொத்தின் இடைக்கால வருமானம் தொடர்பான பாகப்பரிகாரம் போன்றவை தள்ளுபடி செய்யப்பட்டும், தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு, தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.10 17:00:41 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1 – சிவக்குமார்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | சின்னதம்பி இறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.2 | -- | ரவி இறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.3 | -- | மனோன்மணி இறப்பு சான்றிதழ். |
| வா.சா.ஆ.4 | -- | சின்னதம்பி வாரிசு சான்றிதழ். |
| வா.சா.ஆ.5 | -- | அ.வ.எண்.117/2012 வழக்குரை நகல். |
| வா.சா.ஆ.6 | -- | அ.வ.எண்.117/2012 எதிர்வழக்குரை நகல். |
| வா.சா.ஆ.7 | -- | அ.வ.எண்.117/2012 தீர்ப்பாணை நகல். |
| வா.சா.ஆ.8 | -- | கணினி பட்டா நகல். |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : –**

பி.சா.1 – அசோகன்

பி.சா.2 – கவிதா

பி.சா.3 – தட்சிணாமூர்த்தி

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–</u>**

| **ஆவணங்களின் வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | –– | பட்டா சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | –– | கணிணி பட்டா சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.3 | 30.09.2010 | உயில் ஆவணம் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.4 | –– | சின்னதம்பி இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.5 | –– | கணிணி பட்டா மற்றும் புலவரைபட நகல். |
| பி.சா.ஆ.6 | –– | கணிணி பட்டா மற்றும் புலவரைபட நகல். |
| பி.சா.ஆ.7 | 30.09.2010 | அசல் உயில் ஆவணம், |
| பி.சா.ஆ.8 | –– | கணிணி பட்டாக்கள். |

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.04.10 17:00:49 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.